**கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 170/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 சண்முகம் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 14.02.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) தாவா சொத்து எந்த வருடம் எனக்கு கிடைத்தது என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கிடைத்தது. வருடம் ஞாபகமில்லை. எனக்கு அரசாங்கத்தால் மேற்படி சொத்து கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். அதற்கான ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.1 ஐ தவிர வேறு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து பூமிதான போர்டு பெயரில்தான் உள்ளது என்றும், என் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. என் பெயரில்தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல கிணறு  நான் வெட்டியது எனக்காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிணறு கூட்டுக்கிணறா என்றால் இல்லை. எனக்கு மட்டும் பாத்தியப்பட்டது.

2) கிணற்றை நானும் என் தம்பியும் 30 வருடமாக கூட்டாக அனுபவம் செய்கிறோம் என்றால் சரியல்ல.  கிணறுவெட்ட ஜீவேந்திரா திட்டத்தின் கீழ் மனுகொடுத்தபோது அதில் கையெழுத்து போட சொல்லி 1ம் பிரதிவாதியிடம் கேட்டேன் அவர் மறுத்துவிட்டார். 1ம் பிரதிவாதி தனது நிலத்தை எவ்வாறு சாகுபடி செய்கிறார் என்றால் மானாவாரி நிலம் தான். நான்மட்டும்தான் கிணற்றை பயன்படுத்தி சாகுபடி செய்கிறேன். பம்பு செட் வாங்குவதற்கு யார் பணம் கொடுத்தார்கள் என்றால் நான் தான் பணம் கொடுத்து வாங்கினேன். பணம் கொடுக்கிறேன் என 1ம் பிரதிவாதி ஏமாற்றிக் கொண்டிருந்தார். ஆனால் பணம் கொடுக்கவில்லை.  கிணற்றில் 1ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லாத போது எதற்காக அவரிடம் பணம் கேட்டேன் என்றால் பணம் கொடு இருவரும் சாகுபடி செய்யலாம் எனக்கேட்டேன் அதற்கு அவர் எனக்கு கிணறு வேண்டாம் எதுவும் வேண்டாம் என சொல்லிவிட்டார்.

3) பூமிதான போர்டில் எங்கள் சகோதரர்கள் நான்கு பேருக்கும் சேர்த்து 5 ஏக்கர் 56 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது. என் சகோதரர்கள் சுப்பிரமணி, பெருமாள் இருவரும் தனியாக கிணறு வெட்டிக்கொண்டார்கள் என்றால் ஆமாம். அவர்கள் ஒரு

மூலையிலும், நான் ஒரு மூலையிலும் கிணறு வெட்டிக்கொண்டோம் என்றால் ஆமாம். சுப்பிரமணியும், பெருமாளும் கூட்டாக சாகுபடி செய்கின்றார்கள் என்றால் சரிதான். என் நிலத்தில் நானும், ஆண்டியப்பனும் கூட்டாக சாகுபடி செய்கிறோம் என்றால் சரியல்ல. நான் தனியாக கிணறு வெட்டி தனியாக சாகுபடி செய்கிறேன். எனக்கும் ஆண்டியப்பனுக்கும் எவ்வளவு நிலம் பிரிந்தது என்றால் எனக்கு 1 ஏக்கர் 33 செண்ட் நிலம் பிரிந்தது. ஆண்டியப்பனுக்கு எவ்வளவு நிலம் என தெரியவில்லை. நாங்கள் நால்வரும் தனித்தனியாக பிரித்து ஆவணம் எழுதிக்கொண்டோமா என்றால் ஆமாம். அந்த ஆவணம் என்னிடம் உள்ளது. அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) எப்போது பிரித்துக்கொண்டோம் என்றால் சுமார் 30 வருடம் இருக்கும். பாகம்பிரித்துக்கொண்ட பின்னிட்டுதான் கிணறு வெட்டினேனா என்றால் ஆமாம். என் நிலத்தின் நான்கெல்லை என்னவென்றால் வடக்கே சங்கம் நிலம் ஆகும். தெற்கே மருதைவீரன் நிலம், மேற்கே வனத்துறை நிலம், கிழக்கே மாரியப்பன் மற்றும் சங்கம் நிலம் உள்ளது. நான் இவ்வழக்கில் மேற்படி நான்கெல்லையை குறிப்பிடவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். எனது முதல்விசாரணையிலும், நான்கெல்லை சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிலத்தின் கிழக்கே 1ம் பிரதிவாதி ஆண்டியப்பன் நிலம் உள்ளது. எனது நிலத்திற்கும் ஆண்டியப்பன் நிலத்திற்கும் இடையே வரப்பு உள்ளது என்றால் சரிதான். அவர் என்ன சாகுபடி செய்துள்ளார் என்றால் எதுவும் செய்யவில்லை. தரிசாக உள்ளது. தாவா சொத்து பூமிதான போர்டுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் அனுபவத்தின் பேரில் எங்களுக்கு வழங்கப்பட்டது.

5) எனக்கும் ஆண்டியப்பனுக்கும் எப்போது தகராறு ஏற்பட்டது என்றால் 2020 வருடம் முதல் தகராறு ஏற்பட்டது. என் சாட்சிய வாக்குமூலத்தின் பத்தி 8 ல் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் 2002 ம் ஆண்டுமுதல் பிரச்சனை உள்ளதாக சொல்வது பொய்ய என்றால் சரியல்ல. பம்புசெட்டை அனுபவம் செய்வதில் தான் தகராறு என்றால் தண்ணீர் விடசொல்லி கேட்டார். நான் விட மாட்டேன் என சொல்லிவிட்டேன். சுப்பிரமணி, பெருமாள் கிணற்றில் மோட்டார் உள்ளதா என்றால் இல்லை. நான் ஏன் தண்ணீர் விடமாட்டேன் என சொன்னேன் என்றால் 2 வருடமாக தண்ணீர் கொடுத்து அவர் அதற்கு 1 ரூபாய் கூட பணம் கொடுக்கவில்லை. அதனால் தண்ணீர் விடவில்லை. பணம் கொடுப்பது சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்ததா என்றால் நடந்தது. அவர் எதற்கும் கட்டுப்படமாட்டேன் என சொல்லிவிட்டார்.

6) தாவா சொத்தில் உள்ள கிணற்றில் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சமபாகம் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கிணறு மட்டும்தான் தகராறு என்றும், பிரதிவாதிகள் என் சுவாதீனத்தில் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

Kulithalai.